# திருப்பூர் ஊத்துக்குளி யில் ரூ.27.31 லட்சத்தில் தொல்லியல் ஆய்வு!

## மக்களவையில் டி.ஆர். பாலு கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் தகவல்!

புதுடெல்லி, ஜூலை 21-
இந்திய தொல்லியல் ஆய்வு நிறுவனம் சென்ற ஐந்து ஆண்டுகளில் நாட்டின் பல்வேறு இடங்களில் மேற்கொண்ட தொல்லியல் அகழ்வாய்வுகள் திட்டங்கள் குறித்து நாடாளுமன்ற மக்களவையில் திமுக மக்களவைக் குழுத்தலைவரும் கழக பொருளாளருமான டி.ஆர்.பாலு எம்.பி. வினா ஒன்றினை எழுப்பி இருந்தார். மாநில வாரியாக அகழ்வுப் பணிகள் நடைபெற்று வரும் ஊர்கள், ஒவ்வொரு திட்டத்தின் மீதான செலவு, பணி நிறைவுக்கான கால இலக்கு, அகழ்வாய்வுகள் மீது மேற்கொள்ளப்பட்ட அறிவியல் ரீதியான நிரூபணங்கள் போன்ற பல்வேறு தகவல்களை இந்த கேள்வியின் வாயிலாக டி. ஆர்.பாலு அவர்கள் கேட்டு இருந்தார்.



ஒன்றிய அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் பதில் வருமாறு

இந்த கேள்விக்கு ஒன்றிய பண்பாடு மற்றும் சுற்றுலாத் துறைக்கான அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் அவர்கள் இன்று (20.7.2026) மக்களவையில் எழுத்து பூர்வமாக பதில் அளித்தார். அதன்படி, குஜராத், அரியானா, மகாராட்டிரம், உத்தரப் பிரதேசம், கர்நாடகம் , தமிழ் நாடு, பிகார், ஒரிசா, தெலுங்கானா ஆகிய 9 மாநிலங்களில் மொத்தம் 16 ஊர்களில் இந்திய தொல்லியல் ஆய்வுத் துறையின் அகழ்வுப் பணிகள் மொத்தம் ரூ.8.95 கோடி செலவில் நடைபெற்று வருகின்றன.

**ஊத்துக்குளி, குமரிக்கல் பகுதியில் அகழ்வு.**

தமிழ் நாட்டில் திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி வட்டம் குமரிக்கல் என்ற ஊரில் செயல் படுத்த பட்டு வரும் அகழ்வாய்வுப் பணிகளுக்கு இதுவரை 27,30,782 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இங்கு அமைந்துள்ள தொன்மைக்காலக் குடியிருப்பு பகுதி பற்றிய ஆய்வு இங்கு நடைபெறும் ஆய்வு மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில், அதாவது 2021முதல் 2025 வரை,இந்தியா முழுவதும் பல்வேறு இடங்களில் மொத்தம் 121 இடங்களில் மத்திய தொல்லியல் துறை அகழ்வாய்வப் பணிகளை மேற்கொண்டது.

இந்த அகழ்வுகளின் போது கட்டடங்களின் எச்சங்கள், இறந்தோர் புதையிடங்கள், மட்கலங்கள், நாணயங்கள், பாசிமணிகள் உள்ளிட்ட நகைகள் அணிகலன்கள்,வேளாண் கருவிகள், எலும்பு பொருட்கள் போன்றவை கண்டுபிடிக்கப் பட்டன. நிறுவப்பட்டுள்ள செயல்முறைகளின் படி இவற்றின் மாதிரிகள் பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு அறிவியல் நிரூபண சோதனைகளுக்க்காக அனுப்பப் பட்டன.

அகழ்வுப் பணிகள் தொடர்பாக நீதிமன்றங்களால் எந்த ஆணையும் பிறப்பிக்க படவில்லை எனவும் தனது பதிலில் அமைச்சர் ஷெகாவத் தெரிவித்தார்.

### சமக்ரா சிக்ஷா திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்கவேண்டிய

# ரூ.3000 கோடி நிதியை விடுவிக்கப்போவது எப்போது?

## மக்களவையில் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 21-
ஒன்றிய அரசின் சமக்ரா சிக்ஷா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட வேண்டிய ரூ.3,284 கோடி நிதியை ஒன்றிய அரசு நிறுத்தி வைத்துள்ளதற்கான காரணங்கள் என்ன? என்றும் நிதிவிடுவிப்பு தாமதத்தால் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்பை ஒன்றிய கல்வி அமைச்சகம் கருத்தில் கொண்டுள்ளதா என்றும் நாடாளுமன்றத்தில் ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் அவர்களிடம் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.



அதன் விவரங்கள் பின்வருமாறு:

சமக்ரா சிக்ஷா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட வேண்டிய ரூ.3,284 கோடி நிதியை ஒன்றிய அரசு நிறுத்தி வைத்துள்ளதா? நிறுத்தி வைத்திருந்தால் அதற்கான காரணங்கள் என்ன?

சமக்ரா சிக்ஷா நிதி விடுவிப்பு என்பது தேசியக் கல்விக் கொள்கை (NEP) 2020 அல்லது ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கை திட்டத்தைச் செயல்படுத்துவதுடன் இணைக்கப்பட்டுள்ளதா? மேலும், ஒன்றிய அரசால் நிதியுதவி அளிக்கப்படும் ஒரு திட்டத்தின் மீது இத்தகைய நிபந்தனைகளை விதிப்பதற்கான சட்டப்பூர்வமான அடிப்படை உள்ளதா?

நிதி விடுவிப்பு தாமதத்தால் தமிழ்நாட்டில் ஆசிரியர்களின் ஊதியம், பள்ளி உள்கட்டமைப்பு வசதி, மாணவர் நலத் திட்டங்கள் மற்றும் கற்றல் விளைவுகள் ஆகியவற்றின் மீது ஏற்படும் பாதிப்பையும், தாக்கத்தையும் அமைச்சகம், மதிப்பீடு செய்துள்ளதா? அவ்வாறெனில், அதன் விவரங்கள் என்ன?

இதே போன்ற நிபந்தனைகள், மற்ற மாநிலங்கள் மீதும் விதிக்கப்பட்டிருந்தால், மாநில வாரியாக அதன் விவரங்கள் என்ன?

லட்சக்கணக்கான மாணவர்களின் கல்வி நலனைக் கருத்தில் கொண்டு, மாநில அரசுடனான கொள்கை ரீதியான கருத்து வேறுபாடுகளை பார்க்காமல், நிலுவையில் உள்ள நிதியை, ஒன்றிய அரசு எவ்வித நிபந்தனையுமின்றி உடனடியாக விடுவிக்குமா? அவ்வாறெனில் ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு தயாநிதிமாறன் கேள்வி எழுப்பினார்.

### வேலூர் மாவட்டத்தில் காலணி சார்ந்த தொழில்களுக்கான திறன்மிகு

# பணியாளர்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும்!

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜூலை 21-
தமிழ்நாட்டின் வேலூர் மாவட்டத்தில் செயல்படும் தோல், காலணி, உற்பத்தி மற்றும் அது சார்ந்த தொழில்களுக்கு திறன் மிகு பணியாளர் தேவைகளைப் பூர்த்தி செய்ய, அதிக அளவிலான திறன்மிக்க மனிதவளம் மற்றும் தொழில் சார்ந்த பயிற்சித் திட்டங்கள் மனிதவளத் தேவைகள், திறன் இடைவெளிகள் மற்றும் பயிற்சித் தேவைகள் தொடர்பாக ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன என்று நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு:-

தமிழ்நாட்டின் வேலூர் மாவட்டத்தில் செயல்படும் தோல், காலணி, உற்பத்தி மற்றும் அது சார்ந்த தொழில்களுக்கு திறன் மிகு பணியாளர் தேவைகளைப் பூர்த்தி செய்ய, அதிக அளவிலான திறன்மிக்க மனிதவளம் மற்றும் தொழில் சார்ந்த பயிற்சித் திட்டங்கள் தேவை என்ற கருத்தை அரசு ஏற்கிறதா?

அவ்வாறாயின், இத்தொழில்களுக்கான மனிதவளத் தேவைகள், திறன் இடைவெளிகள் மற்றும் பயிற்சித் தேவைகள் குறித்து அரசால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் விவரங்கள் என்ன? இல்லையெனில், அதற்கான காரணங்கள் என்ன?

வேலைவாய்ப்புத் திறன், பணியாளர் தயார் நிலை, தொழிற்பயிற்சி (APPRENTICESHIP) வாய்ப்புகள் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றை அதிகரிப்பதற்காக, தொழில் நிறுவனங்கள், பயிற்சி வழங்குநர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து அரசால் செயல்படுத்தப்பட்ட அல்லது செயல்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

2020-21-ஆம் ஆண்டு முதல் இத்தகைய திட்டங்களின் கீழ் அரசால் ஒதுக்கப்பட்ட, விடுவிக்கப் பட்ட மற்றும் பயன்படுத்தப் பட்ட நிதியின் விவரங்கள் (ஆண்டு வாரியாக); மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம், பணி நியமன முடிவுகள் மற்றும் பணியாளர் மேம்பாடு ஆகியவற்றில் அரசு அடைந்துள்ள முன்னேற்றம் மற்றும் வேலூர் மாவட்டத்தில் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக அரசு திட்டமிட்டுள்ள எதிர்கால விரிவாக்கத் திட்டங்கள் யாவை?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகத்தின் இணை அமைச்சர் (தனிப்பொறுப்பு) ஜெயந்த் சௌத்ரி எழுத்து பூர்வமாக அளித்த பதில் கீழ்வருமாறு:



தமிழ்நாட்டின் வேலூருக்கான 2024-25 மாவட்டத் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் (DSDP) அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு விரிவான திறன் இடைவெளி மதிப்பீட்டின்படி, மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.4% பங்களிக்கும் இந்த மாவட்டம், குறிப்பாக வரவிருக்கும் தோல், விருந்தோம்பல் மற்றும் சுகாதாரத் துறைகளால் உந்தப்பட்டு, அடுத்த ஆறு ஆண்டுகளில் சுமார் ஒரு லட்சம் திறன் வாய்ந்த மற்றும் பகுதித் திறன் வாய்ந்த தொழிலாளர்களுக்கான கடுமையான தேவையை எதிர்கொள்கிறது.

இந்தியாவின் தோல் ஏற்றுமதியில் 37%க்கும் அதிகமான பங்கைக் கொண்டுள்ள ஒரு முக்கிய உலகளாவிய மையமாகவும், திட்டமிடப்பட்ட 100 ஏக்கர் MSME பூங்காவுடன் சுமார் 1,200 நுண் மற்றும் சிறு அலகுகளைக் கொண்டதாகவும் இருப்பதால், வேலூரின் அதிக தொழிலாளர் தேவைப்படும் உற்பத்தித் துறை, பெண் ஆதிக்கம் செலுத்தும் தொழிலாளர் சக்தியை பெரிதும் சார்ந்துள்ளது. இதில், காலணிகளின் மேற்பகுதிகளைத் தைப்பதற்காக இடைத்தரகர்கள் மூலம் தொழிற்சாலைகளால் பணியமர்த்தப்பட்ட ஏராளமான பெண் தொழிலாளர்களும் அடங்குவர். இருப்பினும், ஃப்ளோரிண்ட் குழுமம், ஃப்ளோரன்ஸ் மற்றும் கே. எச். குழுமம் போன்ற முக்கிய நிறுவனங்களிடையே உற்பத்தித் தளப் பணியாளர் பற்றாக்குறை, பணிக்கு வராமை மற்றும் அதிகப்படியான பணியாளர் விலகல் போன்ற சவால்களைத் தொழிற் சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

**நிதி ஒதுக்கீடு:** தமிழ்நாட்டில் MSDEயின் முக்கியத் திட்டங்களின் கீழ் கடந்த ஆறு ஆண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டில் விடுவிக்கப் பட்ட நிதிகள் பின்வருமாறு:

PMKVY திட்டத்தின் கீழ் கடந்த ஆறரை ஆண்டுகளில் முறையே ரூ.31.66 கோடி,

ரூ.11.04 கோடி, ரூ.05.40 கோடி, ரூ.41.48 கோடி, ரூ.63.08 கோடி, ரூ.04.96 கோடி, ரூ.00.41 கோடி, (30.06.2026 வரை) என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

NAPS திட்டத்தின் கீழ் ஆறரை ஆண்டுகளில் ரூ.12.03 கோடி, ரூ.13.44 கோடி, ரூ.40.71 கோடி, ரூ.63.54 கோடி, ரூ.67.36 கோடி, ரூ.64.98 கோடி, ரூ.19.43 கோடி, (30.06.2026 வரை) என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேபோல JSS திட்டத்தின் கீழ் ரூ.03.36 கோடி, ரூ.03.19 கோடி, ரூ.04.06 கோடி, ரூ.04.32 கோடி, ரூ.04.27 கோடி, ரூ.04.52 கோடி, ரூ.01.00 கோடி, (30.06.2026 வரை) என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி கிசான் விருத்தி 4.0 (PMKVY 4.0) திட்டத்தின் கீழ், முன் அங்கீகரிக்கப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் பயிற்சி செலவுகளை ஈடுகட்ட, செயல்படுத்தும் முகமைகளுக்கு நிதி விடுவிக்கப்படுகிறது. PMKVY 4.0 ஒரு மத்தியத் துறைத் திட்டம் என்பதால், இதில் மாநில அளவிலான கூறு எதுவும் இல்லை. JSS திட்டத்தின் கீழும், அரசு சாரா நிறுவனங்களுக்கு (NGOs) நேரடியாக நிதிவிடுவிக்கப்படுகிறது. NAPS திட்டத்தின் கீழ், பயிற்சி பெறுபவர்களுக்கு நேரடிப் பணப் பரிமாற்றம் (DBT) மூலம் மாதம் ரூ. 1500/ வரை உதவித்தொகை வழங்கப்படுகிறது.

தகவல் தொழில்நுட்பப் பள்ளிகள் (ITIs) மூலம் செயல்படுத்தப்படும் CTS திட்டம் தொடர்பான அன்றாட நிர்வாகம் மற்றும் நிதிக் கட்டுப்பாடு அந்தந்த மாநில அரசு/யூனியன் பிரதேச நிர்வாகத்தின் பொறுப்பில் உள்ளது.

திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவோர் சூழல் அமைப்புகளுக்கான ஒரு 'டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பாக' (DIGITAL PUBLIC INFRASTRUCTURE) 'ஸ்கில் இந்தியா டிஜிட்டல் ஹப்' (SIDH) இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது என்பன உள்ளிட்ட பல்வேறு முயற்சிகள் காரணமாக, 2014-ஆம் ஆண்டு முதல் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் (ITIகள்) மற்றும் தேசிய திறன் பயிற்சி நிறுவனங்கள் மூலம் 1.52 கோடிக்கும் அதிகமான இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது; PMKVY திட்டத்தின் கீழ் 1.60 கோடிக்கும் அதிகமான இளைஞர்களும், JSS மூலம் சுமார் 26.51 லட்சம் இளைஞர்களும் பயிற்சி பெற்றுள்ளனர்; மேலும் NAPS திட்டத்தின் கீழ் 54.42 லட்சம் இளைஞர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

### நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும்

# சமமான உயர்கல்வி வாய்ப்புகள் உறுதி செய்யப்படுமா?

## மக்களவையில் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 21
அரக்கோணம் நாடாளுமன்ற கழக உறுப்பினர், எஸ்.ஜெகத்ரட்சகன் மக்களவையில், தேசிய கல்விக் கொள்கை-2020-ன் நோக்கங்களுக்கு ஏற்ப நாட்டில் உயர்கல்வி சூழல் விரிவாக்கம், குறிப்பாக தமிழ்நாட்டில் உயர்கல்வி மாணவர் சேர்க்கை, கல்வி அணுகல், உயர்கல்வி வாய்ப்புகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் பரவல், கல்வி வசதி குறைவாக உள்ள பகுதிகளில் உயர்கல்வி உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சமமான உயர்கல்வி வாய்ப்புகளை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து ஒன்றிய அரசின் கல்வித் துறையின் இணை அமைச்சர் டாக்டர் சுகாந்த மஜும்தார் அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார்.

இக்கேள்விக்கு ஒன்றிய அரசின் கல்வித் துறையின் இணை அமைச்சர் டாக்டர் சுகாந்த மஜும்தார் அளித்த பதில் வருமாறு:-

கல்வி அரசியலமைப்பின் பொதுப்பட்டியலில் இடம்பெற்றுள்ளதால், உயர் கல்வி நிறுவனங்களின் பெரும்பாலானவை மாநிலங்களின் நிர்வாக வரம்பிற்குள் செயல்பட்டு வருவதாகவும், மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து கல்வி வசதி குறைவாக உள்ள பகுதிகள் மற்றும் சமூக ரீதியாக பின்தங்கிய மக்களுக்கு உயர்கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்தி வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.


அகில இந்திய உயர் கல்வி ஆய்வின் தரவுகளின் படி, நாட்டில் உயர்கல்வி மாணவர் சேர்க்கை 2014-15 ஆம் ஆண்டில் 3.42 கோடியாக இருந்தது 2023-24 ஆம் ஆண்டில் 4.50 கோடியாக உயர்ந்துள்ளதாகவும், இது 31.5 சதவீத உயர்வாகும் என்றும், 2014-15 ஆம் ஆண்டில் 23.7ஆக இருந்த மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் 2023-24 ஆம் ஆண்டில் 30 ஆக உயர்ந்துள்ளதாகவும் தெரிவித்தார்.



தமிழ்நாட்டில், உயர் கல்வி மாணவர் சேர்க்கை 2014-15ஆம் ஆண்டில் 33.53 லட்சமாக இருந்தது 2023-24 ஆம் ஆண்டில் 35.77 லட்சமாக உயர்ந்துள்ளதாகவும், 2014-15 ஆம் ஆண்டில் 44.6 ஆக இருந்த மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் 2023-24 ஆம் ஆண்டில் 52.3 ஆக உயர்ந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், கல்வி வசதி குறைவாக உள்ள பகுதிகளில் உயர்கல்வி அணுகலை மேம்படுத்தும் நோக்கில் செயல்படுத்தப்பட்டு வந்த ராஷ்ட்ரிய உச்சதர் சிக்ஷா அபியான் திட்டத்தின் மூன்றாம் கட்டம், 2023 ஜூன் மாதத்தில் பிரதம மந்திரி உச்சதர் சிக்ஷா அபியான் திட்டமாக தொடங்கப்பட்டதாகவும், 2023-24 முதல் 2025-26 வரையிலான காலத்திற்கு ரூ.12,926.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இதன் கீழ் 613 திட்டங்களுக்கு ரூ.8,168.51 கோடி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், புதிய இந்திய தொழில்நுட்பக் கழகங்களின் கல்வி மற்றும் உள்கட்டமைப்பு விரிவாக்கம், ஐந்து பல்கலைக்கழக நகரியங்கள் அமைத்தல் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதப் படிப்புகளில் மாணவியர் சேர்க்கையை ஊக்குவிக்கும் வகையில் மாணவியருக்கான விடுதிகள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதாக ஒன்றிய அரசின் கல்வித் துறையின் இணை அமைச்சர் டாக்டர் சுகாந்த மஜும்தார் மக்களவையில், தி.மு.க. அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதில் அளித்துள்ளார்.



## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ர. லோகநாதன்**
**ஜூலை 21 (2022)**

இளமைக் காலம் முதலே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

எழும்பூர் பகுதியில் அண்ணா படிப்பகச் செயலாளராகவும் தொடர்ந்து பகுதி பிரதிநிதி, வட்டச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

சென்னை தொலைபேசி ஆலோசனைக்குழு உறுப்பினராக இருந்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### மக்கள் நலத்திட்டங்கள் – துறைகளின் முன்னேற்றத்திற்கு

# தமிழ்நாட்டிற்குரிய நிதிப்பங்கை ஒன்றிய அரசு உறுதி செய்ய வேண்டும்!

## மக்களவையில் ஈரோடு கே.இ.பிரகாஷ் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜூலை 21-
தமிழ்நாட்டுக்கு நிதி வழங்குவது குறித்த கேள்விக்கு ஒன்றிய அரசிடமிருந்து உரிய பதில் வரவில்லை எனவும், உறுதியான நிலைபாட்டை ஒன்றிய அரசு எடுக்க வேண்டும் எனவும் நாடாளுமன்ற மக்களவையில் ஈரோடு கே.இ.பிரகாஷ் வலியுறுத்தியுள்ளார்.

அவர் கூறியதாவது :-

தமிழ்நாட்டின் நியாயமான நிதிப் பங்கு குறித்த அடிப்படை கேள்விக்கு ஒன்றிய அரசு பதிலளிக்கத் தவறியுள்ளது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் நேரடி வரி வசூலில் முன்னணி பங்களிப்பு வழங்கும் மாநிலமாக தமிழ்நாடு விளங்கியபோதும், அதற்கேற்ப நியாயமான நிதிப் பங்கு வழங்கப்படுகிறதா என்ற கேள்விக்கு நேரடியாக பதிலளிக்காமல், வரி பகிர்வில் 4.079 சதவீதத்திலிருந்து 4.097 சதவீதமாக ஏற்பட்டுள்ள மிகக்குறுகிய உயர்வை மட்டும் சுட்டிக்காட்டியுள்ளது. இது நிதி சமநீதி தொடர்பாக எழுப்பப்பட்டுள்ள அடிப்படையான கேள்விக்கான பதிலாக அமையவில்லை. அதேவேளையில், தமிழ்நாட்டின் உரிமையான நிதிப் பங்கை உறுதி செய்ய தற்போதைய மாநில அரசு ஒன்றிய அரசிடம் மேற்கொண்டுள்ள முயற்சிகள் குறித்து வெளிப்படையாக விளக்க வேண்டும்.

**ஒன்றிய அரசிடம் தெளிவான பதில் இல்லை!**

நிலுவை நிதிகள் தொடர்பாக ஒன்றிய அரசின் பதில் முழுமையானதாக இல்லை. மத்திய ஆதரவு திட்டங்கள் (CSS), மானிய உதவிகள், பேரிடர் நிவாரண நிதி உள்ளிட்ட பிரிவுகளில் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட வேண்டிய நிலுவை நிதிகள் குறித்து பிரிவு வாரியாகவும், ஆண்டு வாரியாகவும் விவரங்கள் கேட்கப்பட்டிருந்தன.

ஆனால், அவற்றை வழங்குவதற்குப் பதிலாக நிதி வழங்கும் நடைமுறைகள் மட்டுமே விளக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிற்கு தற்போது ஏதேனும் நிதிகள் நிலுவையில் உள்ளனவா என்பது குறித்த தெளிவான தகவல் வழங்கப் படவில்லை. இதனிடையே, ஒன்றிய அரசிடமிருந்து பெற வேண்டிய நிலுவை நிதிகளின் முழுமையான பட்டியலையும், அவற்றை விரைந்து பெற்றிட மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் மாநில அரசு பொதுமக்கள் முன் வெளியிட வேண்டும்.



மக்கள் தொகை அடிப்படையில் வரி பகிர்வுக்கும் பதிலில்லை!

நிதி ஆணையத்தின் வரி பகிர்வு அளவுகோல்கள் குறித்த தமிழ்நாட்டின் கவலைக்கு ஒன்றிய அரசு பதிலளிக்கவில்லை. மக்கள் தொகை கட்டுப்பாட்டில் வெற்றி பெற்று, பொருளாதார வளர்ச்சியில் முன்னணியில் உள்ள தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு தற்போதைய மக்கள் தொகை அடிப்படையிலான வரி பகிர்வு அளவுகோல்கள் பாதிப்பை ஏற்படுத்துகின்றனவா? என்ற கேள்விக்கு நேரடியாக பதிலளிக்காமல், தென் மாநிலங்களின் மொத்த பங்கு உயர்ந்துள்ளது என்ற பொதுவான தகவலை மட்டுமே ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழ்நாட்டின் நிலைப்பாட்டை நிதி ஆணையத்திடமும் ஒன்றிய அரசிடமும் மாநில அரசு அதிகாரப்பூர்வமாக வலியுறுத்தியுள்ளதா? என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும்.

வரி பகிர்வு முறையை மறுஆய்வு செய்வதில் ஒன்றிய அரசு எந்த உறுதியையும் வழங்கவில்லை. தற்போதைய வரி பகிர்வு முறை மற்றும் ஒன்றிய பட்ஜெட் நிதி ஒதுக்கீட்டு அளவுகோல்களை மறுபரிசீலனை செய்வதற்கான எந்தத் தெளிவான உறுதியும் பதிலில் இடம்பெறவில்லை. "காலந்தோறும் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது" என்ற பொதுவான விளக்கம் மட்டுமே அளிக்கப் பட்டுள்ளது.

**உறுதியான நிலைப்பாடு!**

தமிழ்நாடு மற்றும் பிற தென் மாநிலங்கள் தொடர்ந்து முன்வைத்து வரும் நியாயமான கோரிக்கைகளுக்கு ஒன்றிய அரசு உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

ஈரோடு போன்ற மாவட்டங்களின் வளர்ச்சிக்கு நியாயமான நிதி ஒதுக்கீடு இன்றியமையாதது. இது வெறும் நிதி ஒதுக்கீடு குறித்த விவாதம் அல்ல; மாவட்ட வளர்ச்சியுடன் நேரடியாக தொடர்புடைய முக்கியமான பிரச்சினையாகும்.

உள்கட்டமைப்பு மேம்பாடு, பாசன வசதிகள், வேளாண்மை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் (MSME), மக்கள் நலத் திட்டங்கள் உள்ளிட்ட துறைகளின் முன்னேற்றத்திற்கு ஒன்றிய அரசின் போதுமான மற்றும் காலமுறை நிதி ஒதுக்கீடு அவசியம்.

**ஈரோடு போன்ற மாவட்ட வளர்ச்சிக்கு நிதி தேவை!**

கூட்டாட்சி தத்துவத்திற்கு ஏற்ப தமிழ்நாட்டிற்கு உரிய நிதிப் பங்கை ஒன்றிய அரசு உறுதி செய்ய வேண்டும். அதேநேரத்தில், ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படும் நிதி முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு, ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களின் வளர்ச்சியில் கண்கூடும் பலன்களை உருவாக்க மாநில அரசும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஈரோடு கே.இ.பிரகாஷ் மக்களவையில் வலியுறுத்தியுள்ளார்.